மதுரை, கூடுதல் தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர்: திரு. தி. குமரன்., எம்.காம்.,எம்.எல்.,
சுருக்கம்

---

பணிக்குழு – தொழிலாளர் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2015– 2016, 2016–2017, 2017–2018 வரையிலான காலத்திற்கு இளநிலை உதவியாளர் பதவிக்குத் தேர்வு செய்யப்பட்டு, தொழிலாளர் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது – திருநெல்வேலி, தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகத்தில் செல்வி.க.சுவஸ்தி, என்பவர் இளநிலை உதவியாளராக பணியமர்த்தப்பட்டது – இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணைகள் வழங்குதல்.

செ.மு ஆ.எண். அ / 855 / 2021–1 நாள்– .04.2021.

படிக்கப்பட்டது.

1 தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் கடித எண் 1022/PSD-G2/2019, நாள். 18.02.2019.
2 சென்னை, தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண் ஜி3/44771/2018–1 நாள் 01.03.2019.
3 திருநெல்வேலி, தொழிலாளர் இணை ஆணையர் கடித எண். அ1/5601/2021, நாள்–21.04.2021

ஆணை

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வுகள் – தொகுதி IV-ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு 2015– 2016, 2016–2017, 2017–2018 வரையிலான காலத்திற்கு எழுத்துத் தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்டு இளநிலை உதவியாளர் பதவிக்கு தொழிலாளர் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 2–ல் காணும் செயல்முறை ஆணையின்படி திருநெல்வேலி, தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியமர்த்தப்பட்ட செல்வி.க.சுவஸ்தி, இளநிலை உதவியாளராக 11.03.2019 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார்.

<u>பணிவரன் முறை</u>

இப்பணி சம்பந்தமாக சென்னை, உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையில் உள்ள வழக்கு.

" The Regularization is subject to the outcome of the WPS pending on the files of the Honble High Court of Madras/ Madurai Bench of the Honble High Court of Madras relating to the recruitment to the post included in combined civil services Examination-iv for the year 2015–2016, 2016-2017, and 2017-2018".

தமிழ்நாடு தேர்வாணையத்தால் வழங்கப்பட்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதால் செல்வி.க.சுவஸ்தி, திருநெல்வேலி, தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 11.03.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்யப்படுகிறது.

Scanned with CamScanner

இவர் பணியில் சேர்ந்த நாள் முதல், தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ் செல்வி.க.கவஸ்தி, இளநிலை உதவியாளர் பதவியில், தகுதிகாண் பருவத்தில் வைக்கப்பட்டு, தொடர்ந்து மூன்றாண்டு காலத்தில், இரண்டாண்டு காலப்பணியினை திருப்திகரமாக நிறைவு செய்ய வேண்டும் என ஆணையிடப்படுகிறது.

மேலும் தனியர், பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தால், இளநிலை உதவியாளர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் எனவும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்விலும் தேர்ச்சி பெற்ற பின்னர் தான் தகுதிகாண் பருவத்தினை நிறைவு செய்யத் தகுதிக்குரியவராகப் பெறுவர் ஆவார் என்றும் ஆணையிடப்படுகிறது.

மேலும் அவர் அடுத்த பதவி உயர்விற்கு சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம்–1 மற்றும் தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வகத்துறை தேர்வு பகுதி–அ மற்றும் ஆ–வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி, பணிவரன்முறை உத்தரவினை, தனியரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு, தொடர்புடைய அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு– பணிப்பதிவேடு மற்றும்
பதிவுறுத்தாள்

27/4/21

கூடுதல் தொழிலாளர் ஆணையர்
மதுரை

27/04/2021

27/4/21

பெறுநர்
செல்வி.க.கவஸ்தி,
இளநிலை உதவியாளர்,
தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகம்,
திருநெல்வேலி. (உரிய வழியாக).

நகல்
தொழிலாளர் இணை ஆணையர், திருநெல்வேலி.

Scanned with CamScanner